**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**ஊடக அறிக்கை**

********

**மகாத்மா காந்தியின் 150 ஆவது வருட ஜனன ஞாபகார்த்தத்தை நினைவுகூரும் வகையில் நுவரெலியா, டன்சினேன் தோட்டத்தின் மகாத்மா காந்திபுரத்தில் 1600 மரக் கன்றுகள் நாட்டப்பட்டன**

மகாத்மா காந்தியின் 150 ஆவது வருட ஜனன தினம், உலக சுற்றாடல் தினம் மற்றும் சர்வதேச யோகா தினம் என்பவற்றை நினைவுகூருவதற்கு நுவரெலியா, டன்சினேன் தோட்டத்தின் மகாத்மா காந்திபுரத்தில் ஜூன் 20, 2019 அன்று ஒரு விசேட மரம் நாட்டும் வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது.

'ஒவ்வொரு மனிதனினதும் தேவைக்கானதை உலகம் போதியளவில் கொண்டுள்ளது ஆனால் ஒவ்வொரு மனிதனினதும் பேராசைக்கும் போதுமானதை அல்ல ' என மகாத்மா காந்தி கூறிய வாசகம் பிரபல்யமானது . இயற்கையுடன் ஒருங்கிணைந்து வாழ்ந்த அவரின் வாழ்க்கையைக் கொண்டாடும் முகமாக மரக் கன்றுகள் நாட்டப்பட்டன. இயற்கையின் அளவுக்கதிகமான சுரண்டல் உலக கரிசனைக்குரிய ஒரு விடயமாக மாறியுள்ள நிலையில் இந்த வருடத்தின் சர்வதேச யோகா தினமும் கூட 'காலநிலை செயற்பாடு' என்ற கருப்பொருளின் கீழ் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு என்பவற்றினால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் , 1600 மரக் கன்றுகள் கடந்த வருடம் இந்திய நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட மகாத்மா காந்திபுரம் என்ற கிராமத்தில் நாட்டப்பட்டன.

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க , திரு.வி. புத்திரசிகாமணி, பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிதியத் தலைவர் , மற்றும் டி .சி.மஞ்சுநாத், அபிவிருத்தி ஒத்துழைப்புக் கொன்சியுலர் இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஆகியோர் இணைந்து மரக் கன்றுகளைக் கையளித்ததுடன் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மரக் கன்றுகளையும் நாட்டினார்கள். பாராளுமன்றம் மற்றும் மத்திய மாகாண சபை என்பவற்றின் உறுப்பினர்கள் பலர்இ சிரே ஷ்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் , ஐ.நா ஹபிட்டாட், எல்பிட்டிய பிராந்திய பெருந்தோட்டக் கம்பனி \, மற்றும் ஏனைய பாத்தியதை உடையோர்கள் மற்றும் பிரதேசத்திலிருந்து பெருமளவிலான மக்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

****

கொழும்பு

ஜூன் 20, 2019